(உ) தச்சூர் அரிசன காலனியில் மரங்கள் வெட்டுவது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நான் 42-வது விதியின் கீழ் தீர்மானங்கள் கொடுத்திருந்தும் அதைப்பற்றி இன்னும் பதில் வரவில்லை. மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்கள் எதைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று எனக்கு முதலில் சொன்னால் நான் அனுமதி கொடுக்கலாம் அல்லவா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தச்சூர் அரிசனக் காலனி அமைப்பது சம்பந்தமாக அதிலுள்ள மரங்களை வெட்டியது சம்பந்தமாக அமைச்சரிடத்தில் கேள்வி கேட்டிருந்தேன்; விதி 42-ன் கீழும் கொடுத்து இருந்தேன். அமைச்சரவர்கள் விடை அளிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அந்தக் கேள்விக்கு விடை அளிப்பதற்கு இன்று எடுக்கப்பட்டது. நான் விடையளிப்பதற்குத் தயாராக இருந்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினரவர்கள்தான் துணைக் கேள்வி கேட்கத் தயாராக இல்லை, வரவில்லை.

(ஊ) இரும்புக் கல் ஏற்றுமதியால் சென்னை துறைமுகம் அருகே தூசியினால் மக்கள் உடல்நலம் பாதிப்பு குறித்து.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, கடந்த மாதம் 7 ஆம் தேதி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். சென்னை துறைமுகத்தில் இரும்புக் கல் ஏற்றுமதியினால் ஏற்படுகின்ற தூசுகள் பக்கத்தில் இருக்கின்ற பகுதிகளுக்குப் பரவி, அதனால் ஆஸ்த்மா, டி. பி. நோய்கள் பரவுவதற்கு ஏதுவாக இருக்கிறது. அதனால் பலர் பாதிக்கப்படுவார்கள் என்று அங்குள்ள மருத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை 7—3—1978 ஆம் தேதியில் கொடுத்திருந்தேன். மார்ச் 8 ஆம் தேதியே தாங்கள் ஒப்புதல் அளித்திருக்கிறீர்கள். ஆனால், இதுவரையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன விவரம் என்று அதைப்பற்றி சொல்லிவிட்டீர்கள். அமைச்சரவையின் தரப்பில் பதில் ஏதாவது இருந்தால் சொல்லலாம்.

(பதில் இல்லை)